[1st August 1966

காண்HE HON. SRI S. M. A. MAJID : Yes, Sir.

அடி

திரு. வை. சங்கரன் : பல்வேறு திசைகளில் போகின்ற பஸ்கள் பல இடங்களில் போய் நிற்கின்றன. இதன் காரணமாகப் பொது மக்களுக்கு மிகவும் கஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே ஒரே இடத்தில் நிறுத்துவதற்கு வசதியாக உடனடியாக இந்த ஏற்பாடு செய்யப் படுமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : சம்பந்தப்பட்ட ஜில்லாக் கலெக்டர் அவர்கள் இதைப்பற்றி நேரிடையாகப் பார்வையிட்டு, ரிப்போர்ட் அனுப்புவதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இதைப்பற்றித் தக்க கவனம் செலுத்தப்படுகிறது. இதில் இருக்கின்ற கஷ்டம் என்னவென்றால், ஒவ்வொருவரும், தங்கள் வீட்டின் பக்கத்தில் பஸ்கள் நிற்க வேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள். இதனால்தான் காலதாமதம் ஏற்படுகிறது.

கனம் சபாநாயகர் : கேள்விகள் முடிவடைந்தன.

[*Note*.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

MR. SPEAKER : I have to announce that I have received from the Hon. Leader of the Opposition, notice of a no-confidence Motion against the Council of Ministers.

திரு. இரா. நெடுஞ்செழியன் எழுந்தார்.

## II. POINT OF PROPRIETY *re*. BREACH OF CONVENTION IN PREMATURE PUBLICATION OF CONTENTS OF NO-CONFIDENCE MOTION IN THE PRESS.

* கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தனது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைப் பிரேரேபிக்க இருக்கிறார்கள். அதைப் பிரேரேபிப்பதற்கு அவர் அனுமதி கோருவதற்கு முன்பாக சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். கனம் எதிர்க் கட்சித்தலைவர் அவர்கள் இப்போது தான் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வருவதற்கு இந்த மன்றத்தின் அனுமதியைக் கோர இருக்கிறார்கள். ஆனால் இந்த மன்றத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் வரப்போகிறது என்ற செய்தி மட்டுமல்ல, எந்தெந்தக் காரணங்களுக்காக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்படுகிறது என்கின்ற செய்தியும் வெளிவந்திருக்கிறது. நான் டெல்லியில் இருந்தபோது டெல்லி பத்திரிகைகளில் வெளிவந்ததைப் பார்த்தேன். பம்பாய் பத்திரிகைகளிலும் பார்த்தேன். தமிழ்நாட்டிலுள்ள பத்திரிகைகளிலும் இந்த விவரங்கள் வெளிவந்திருக்கின்றன. தங்களுக்கு நன்றாக நினைவிருக்கும் என்று கருதுகிறேன். 1964-ல் இந்த மன்றத்தில் ஒரு சிறந்த சம்பிரதாயத்தை ஏற்படுத்த வேண்டும் என்று நாம் முடிவு எடுத்திருக்கிறோம். கேள்வி கேட்பதாக இருந்தாலும் சரி, மோஷன் கொண்டு வருவதாக இருந்தாலும் சரி, இந்த மன்றத்தில் தெரிவித்த பின்னால்தான் பத்திரிகைகளுக்குத் தெரிவிக்க வேண்டும் என்று தாங்களும் கூறியிருக்கிறீர்கள். தாங்கள் இதைக் கூறும்பொழுது, பாராளுமன்றத்திலும்

இம்மாதிரி சம்பிரதாயத்தை ஏற்படுத்த வேண்டும் என்று அங்குள்ள கனம் சபாநாயகர் அவர்களே கூறியதையும் தாங்கள் குறிப்பிட்டீர்கள். ஆகவே, இப்படிப்பட்ட செய்திகள் இந்த மன்றத்தில் தெரிவிப்பதற்கு முன்னால் பத்திரிகைகளின் வெளி வருவது சரியல்ல என்று நினைக்கிறேன். அதற்கு மாறாக இந்தச் செய்திகள் மன்றத்தில் தெரிவிப்பதற்கு முன்னால் பத்திரிகையில் வந்திருப்பது குறித்து தங்களது கவனத்தை ஈர்க்கின்றேன்.

* **திரு. இரா. நெடுஞ்செழியன்** : கனம் அவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் நான் கொண்டுவராவிருக்கின்ற தீர்மானத்தைப்பற்றிய விவரங்கள் பத்திரிகையில் வெளிவந்த செய்திகளைப்பற்றி கனம் முதலமைச்சர் அவர்கள் கருத்துத் தெரிவித்து இருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு தீர்மானத்தை இந்த மன்றத்தில் கொண்டு வரப் போகிறோம் என்பதும், அதை இன்னின்ன கட்சிகள் ஆதரிக்கும் என்கின்ற பாராளுமன்றத்தைப் பொறுத்த செய்திகள் செய்தித் தாள்களில் வெளி வந்திருக்கின்றன. இப்படிப்பட்ட செய்தி செய்தித் தாள்களில் வெளி வந்திருப்பதில் எத்தகைய தவறும் இருப்பதாகத் தெரியவில்லை.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : செய்தி வருவதைப்பற்றி நான் ஆட்சேபிக்கவில்லை. எந்தெந்த காரணங்களுக்காகக் கொண்டு வரப்படுகிறது, இன்னின்ன காரணங்கள், இன்னின்ன கட்சிகள் ஆதரிக்கும், எதிர்க்கும் என்ற விவரங்கள் அடங்கிய செய்தி பத்திரிகையில் வந்திருக்கிறது. இதைத்தான் நான் ஆட்சேபிக்கிறேன். நம்பிக்கையில்லாத் தீர்மானம் வரப் போகிறது என்கிற செய்தி வெளி வந்திருப்பதைப்பற்றி நான் ஆட்சேபிக்கவில்லை.

* **திரு. இரா. நெடுஞ்செழியன்** : கனம் அவைத் தலைவர் அவர்களே, இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் குறிப்பிட்டுள்ள விவரங்களை ஏற்கனவே நான் சட்ட மன்றத் துறை செயலாளர் அவர்களிடத்தில் கொடுத்ததற்குப் பின்னால், மனச் சாட்சியின் அடிப்படையில் சொல்லுகிறேன், நான் யாரிடத்திலும் இதிலுள்ள விவரங்களைப்பற்றித் தெரிவிக்கவில்லை. பத்திரிகை நிருபர்கள் கேட்ட நேரத்திலும், நான் இந்த விவரங்களைத் தெரிவிக்கவில்லை. ஆனால் இதிலுள்ள சில விவரங்களை நானும் பத்திரிகையில் பார்த்து ஆச்சரியப்பட்டேன். எப்படி இந்த விவரங்கள் வெளிவந்தன என்பதைப்பற்றி விசாரித்தறிவது மிகவும் பொருத்தம் என்று தான் நானும் கருதுகிறேன். செயலாளர் அவர்களிடத்தில் கொடுத்ததற்கு பின்னால் இந்த விவரங்கள் முழுவதும் இல்லாவிட்டாலும், சில விவரங்கள் எப்படி வெளிவந்தன என்பது எனக்குத் தெரியவில்லை. நானும் யாரிடத்திலும் தெரிவிக்கவும் இல்லை. என்னிடத்திலிருந்து வெளிவருவதற்கும் வழியில்லை. அப்படியிருக்கும் நிலையில் இந்த ஒரு சில காரணங்கள் என்கின்ற விவரம் எப்படி வெளிவந்தது என்பதைக் கண்டு பிடித்து அதற்குரியவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்வதில் எனக்கு எந்தவிதமான மறுப்புரையும் இல்லை. ஆனால் நம்பிக்கை

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [1st August 1966

யில்லாத் தீர்மானம் வரும் என்கின்ற செய்தி வெளிவந்ததில் எந்த விதமான தவறும் இல்லை என்று கருதுகிறேன். இதிலுள்ள விவரங்களைத் தெரிவிப்பதுதான் தங்களுடைய ஆணையை மீறியதாக இருக்கும். அது முறைகேடாகவும் இருக்கும். நம்பிக்கையில்லாத் தீர்மானம் வரும் என்கின்ற செய்தி வருவதில் தவறு எதுவும் இல்லை என்பதை மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் எவ்விதம் காரணங்கள் பற்றிய விவரங்கள் வெளிவந்தன என்பதைப்பற்றி தாங்கள் பரிசீலனை செய்து அதற்குரிய நடவடிக்கை எடுப்பதில் எங்களுக்கு எந்தவிதமான மறுப்புரையும் இல்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் முதலமைச்சர் அவர்கள் எழுப்பியிருக்கும் விஷயம் ஒழுங்குப் பிரச்னைக்குரியது தான். ஆளும் கட்சி மீது எதிர்க் கட்சி நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்போகிறது என்ற செய்தி வருவதில் எந்தவிதமான முறைகேடும் இருப்பதாகத் தெரியவில்லை. இத்தீர்மானத்தை எதிர்க்கட்சித் தலைவர் திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் காரியாலச் செயலாளர் அவர்களிடம் கொடுத்தார்கள். அதிலும் இன்னின்ன காரணங்களுக்காகத் தீர்மானம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று தெரிவித்திருப்பது முறையற்றது தான். இதைத்தான் கனம் முதலமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்வதைப் பார்த்தால், இதற்கு அவர்கள் பொறுப்பு இல்லை, எப்படி வெளிவந்தது என்பதைப்பற்றி அவர்களுக்கும் தெரியவில்லை என்பதைத் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே இது விசாரிக்க வேண்டிய விஷயம், எதிர்க் கட்சித் தலைவர் அவர்களே சொல்லியிருந்தால், இதற்கு அவர்கள் பொறுப்பேற்க வேண்டியிருக்கும். அலுவலகத்திலிருந்து இந்த விவரம் வெளியே போயிருந்தால் அது எப்படிப் போயிற்று, இதற்கு யார் பொறுப்பு என்பதைப்பற்றி விசாரிக்காவிட்டால், அது சட்டசபை இலாகாவுக்கே இழுக்கு ஏற்படக்கூடியதாக இருக்கும். ஆகவே இதை உரிமைக் குழுவுக்கு விட்டு இதைப்பற்றிப் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

MR. SPEAKER: Has the Hon. the Chief Minister got anything to say in the matter?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இதைப்பற்றி ஆராய்ந்து தாங்கள் தான் முடிவு கூற வேண்டும். தங்கள் முடிவுக்கே இதை விட்டுவிடுகிறேன்.

MR. SPEAKER: I will have to enquire into the matter or dispose it of now, . . . .

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** கனம் சபாநாயகர் அவர்களே, இதில் 'பிரைமாஃபேஸி' கேஸ் இருக்கிறதா என்பதை தாங்கள் 'என்கொயர்' பண்ணுங்கள், இதில் ஒன்றும் இல்லை என்று தாங்கள் கருதுவதாக இருந்தால் விட்டுவிடுங்கள். இல்லையென்றால் உரிமைக்

குழுவுக்கு விடலாம். இதிலுள்ள முழு விவரங்களையும் அறிந்து, விசாரித்து, தாங்களே அதில் திருப்தி அடைந்தால், அந்தக் கருத்தைச் சபைக்குத் தெரிவிக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. இரா நெடுஞ்செழியன் :** அவைத்தலைவர் அவர்களே, இதைப் பற்றிய பிரச்னை இங்கு எழுப்பப்பட்டிருக்கிற காரணத்தினால், இதைப் பற்றிய விவரங்களை அறிந்து, அதன் பிறகு என்ன முடிவு எடுக்கலாம் என்பதுபற்றி, கனம் அங்கத்தினர் கலியாண சுந்தரம் அவர்கள் சொல்லியபடி, தாங்கள் நாளைக்கு இதன் மீது தீர்ப்பு அளிக்கலாம் என்று நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

***கனம் சபாநாயகர் :*** நாளைக்கோ அல்லது இரண்டு நாட்கள் கழித்தோ எடுத்துக் கொள்ளலாம்.

## III.—MOTIONS EXPRESSING WANT OF CONFIDENCE IN THE MINISTRY :

### (1) MOTION GIVEN NOTICE OF BY SRI V. R. NEDUNCHEZHIAN.

***கனம் சபாநாயகர் :*** இப்பொழுது கனம் எதிர்க்கட்சித் தலைவர் கொடுத்துள்ள தீர்மானத்தை நான் வாசிக்கிறேன்.

"கீழ்க்கண்ட காரணங்களையும் வேறு சில காரணங்களையும் ஒட்டி கனம் எம். பக்தவத்சலம் அவர்களின் தலைமையின் கீழ் இயங்குகிற அமைச்சரவையின் மீது இப்பேரவை நம்பிக்கை இழந்துவிட்டது என்பதை இந்தப் பேரவை தெரிவித்துக்கொள்கிறது :—

(1) இந்த அரசாங்கம், பொதுவாக எல்லாப் பண்டங்களின், குறிப்பாக அன்றாட வாழ்க்கைக்குத் தேவைப்படுகின்ற இன்றியமையாத பண்டங்களின், மிதமிஞ்சிய விலை ஏற்றத்தைக் கட்டுப்படுத்தத் தவறிவிட்டது ;

(2) இந்த அரசாங்கம் இந்த மாநிலத்தில் உணவு நிலைமையைச் சீராக்கவும், விவசாயித்திற்குத் தேவைப்படும் வசதிகளைச் செய்து கொடுக்கவும், விவசாயிகளுக்குத் தேவைப்படும் வசதிகளைச் செய்து தரவும் தவறிவிட்டது.

(3) இந்த அரசாங்கம் தொழில் நுட்பக் கல்வித் துறைகளுக்கு, குறிப்பாக மருத்துவக் கல்வித் துறைக்கு மாணவ மாணவியரைத் தேர்ந்தெடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செம்மையான முறையில் செய்யத் தவறிவிட்டது ;

(4) இந்த அரசாங்கம் கோயம்புத்தூரில் மூடிக்கிடக்கும் ஆலைகளைத் திறக்கச் செய்யவும், சென்ற சில திங்கள்களாக வேலையின்றித் தவித்திடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள தொழிலாளர் துயரத்தைத் துடைக்கவும் தவறிவிட்டது ;

(5) இந்த அரசாங்கம் சேலம் எஃகு (உருக்கு) தொழிற்சாலை நிறுவுவது பற்றி பலமுறை மீண்டும் மீண்டும் தந்த வாக்குறுதிகளை நிறைவேற்றி வைக்கத் தவறிவிட்டது ;